திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த லைசென்ஸுக்காக அபேட்சையை இந்த அமைச்சரவை தாக்கல் செய்ததா, அல்லது முன்பிருந்த அமைச்சரவை தாக்கல் செய்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முன்பிருந்த அமைச்சரவை எடுத்த முயற்சியை, விட்ட இடத்திலிருந்து தொடுத்து இந்த அரசாங்கம் பணியாற்றி வருகிறது.

திரு. என். வரதராஜன்: இயந்திரக் கருவி தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்கவில்லை என்ற நிலையை சர்க்கார் அறியுமா? அவை என்னென்ன பொருள்கள் என்று அறிவிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமை இல்லை. இதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்ற காரணத்தினால் தான், இந்தத் தொழிற்சாலை ரூ. 2 கோடி அளவிலே உருவாக்கப்படும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தினிடமிருந்து அனுமதி கிடைக்கப் பெற்ற பிறகு இதைத் துவங்குவதற்கான முழு முயற்சியையும் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: இதற்கான மூலதனம், முதல் போடவேண்டியது எவ்வளவு இருக்க வேண்டியிருக்கும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது ரூ. 2 கோடி என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

*Cauvery water for Madras City*

* 76 Q.—THIRU K. VINAYAKAM : } Will the Hon. the
DR. H. V. HANDE : }
Minister for Public Works be pleased to state whether there is any proposal to bring Cauvery water to Madras City for drinking purposes?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னை நகருக்குக் குடி தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, for the past several years we have been told that we are getting the Cauveri water for the Madras City. In fact, both in this House and in the other House whenever we raised this question, we have been given empty promises that we are getting water. As happened during the olden days when Bagiratha brought the Ganges, will the Government also come forward to bring the Cauveri water to the Madras City and if so, what are the concrete plans that they have got in the matter of bringing the Cauveri water to the Madras City?

1967 ஜூன் 26]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது கங்கையைக் கொண்டு வருகிற கதையல்ல. நிச்சயமாகக் காவேரியைக் கொண்டுவருகிற வரலாறு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் பெரும்பாலும் வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருகிற திட்டம்தான். அநேகமாக இந்தத் திட்டம்பற்றி முடிவு பெறும் நிலை இருக்கிறது.

**திரு. கே. விநாயகம்:** இந்தக் குடி தண்ணீர்ப் பிரச்சினை ஒரு பெருத்த அத்தியாவசியமான பிரச்சினையாகிவிட்டது. சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில், நம்முடைய அமைச்சர் தொகுதியில் குடிதண்ணீர் இல்லை, ப்ரொடெக்டட் வாடர் சப்ளை இல்லை. ஆதலால், இந்தப் பிரச்சினை வரும்பொழுதெல்லாம்—'ஐ ஆம் கமிங் டு தி குவெஸ்சின்'—சோமசீலம் பிராஜெக்டிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதாக ஒரு யோசனை இருந்து கொண்டிருக்கிறது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைப்பற்றி இப்பொழுது சொல்லப்படுகிறது. கடைசியாக, காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதாகச் சொல்லப்படுகிறது.

MR. SPEAKER : The hon. Member can now come to the question.

**திரு. கே. விநாயகம் :** இப்படி இரண்டு ராஜ்யங்களுக்குமிடையே இந்தப் பிரச்சினை தீருவது கஷ்டமாக இருப்பதினால், நமது ராஜ்யத்தின் பகுதியிலேயே இருக்கிற வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் அல்லது காவேரி ப்ராஜெக்ட்டுக்கு எவ்வளவு செலவு ஆகும்? இந்தச் செலவுக்கான பணத்தை சர்க்கார் ஒதுக்கி வைத்திருக்கிறார்களா? இல்லையென்றால் கார்ப்பரேஷனுக்கு எந்த விதமான உதவியைத் தந்து இதை முடிப்பது என்ற ஆலோசனை இந்த அரசாங்கத்தினிடம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீராணம் வேறு, காவேரி வேறு என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது என்பது காவேரி நதித் திட்டம்தான் என்பதை அவர்கள் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற இந்தத் திட்டத்திற்கு ரூ. 21 கோடி செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. வி. டி. அண்ணாமலை :** இதற்கு முன்பிருந்த அரசினர் எந்த முறையிலும் சென்னை நகரத்திலுள்ள மக்களுடைய தாகவிடாயைப் போக்குவதற்கு ஏற்ற திட்டத்தை செயல்படுத்தாததனால்தான் இந்த மாதிரி நிலை ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

[1967 ஜூன் 26

**திரு. நா. காசிராமன் :** காவிரி நதித் தண்ணீரை வீராணம் ஏரிக்குக் கொண்டு வருகின்றபோது, வழியில் இருக்கக்கூடிய ஊர்களுக்கு எல்லாம் குடிநீர் வழங்குவதற்கு வகை செய்யப் படுமா? அப்படிச் செய்வதின் மூலம் எத்தனை ஊர்கள் பயன் பெறும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுவதைப்போல் தண்ணீர் வசதி செய்ய முடியாது. தண்ணீர் வீராணத்திற்குக் கொண்டுவருவது கால்வாய் மூலமாக இருந்தால், இடையே அங்கங்கே வருகின்ற தண்ணீர் வீணாகிவிடக்கூடிய நிலைமை ஏற்படும். அதன் மூலம் சென்னைக்குக் கொடுக்க வேண்டிய குடிநீரைக் கொடுக்க முடியாமல் போய்விடும். தண்ணீரைக் குழாய் மூலமாகக் கொண்டுவருவதாக இருந்தால் அங்கங்கே உள்ள இடங்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கு மானால் அந்த நிலைபற்றி ஆராயப்பட்டு அது கவனிக்கப்படலாம்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதால் காவிரிமூலம் பாசனம்பெறும் நிலங்களுக்கு ஏதேனும் பாதகம் ஏற்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு நாளைக்குச் சென்னைக்கு வீராணம் ஏரித் திட்டத்தின்மூலம் 40 மிலியன் காலன் அதிகப் படியாக தண்ணீர் கிடைக்கக்கூடும். ஒரு நாளைக்கு 75 க்யூசெக்ஸ் தண்ணீர் குடிநீருக்காக எடுக்க வேண்டியிருக்கும். ஜனவரி மாதத் திலிருந்து ஜூன் மாதம் வரையில் பாசன காலத்தில் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் க்யூசெக்ஸ்வரை பாசனத்திற்காகத் தண்ணீர் கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 75 க்யூசெக்ஸ் குடிநீருக்காக எடுத்துக்கொள்வதால் பாசனம் எதுவும் கெட்டுவிடாது. ஆனால், குள்ளக்கார் பயிர்செய்யும்பொழுது இதனால் 20,000 ஏக்கர்வரை பாசனம் பாதிக்கப்படும் என்று அங்கேயுள்ளவர்கள் பயப்படு கிறார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்ட உறுப்பினரும் மற்றவர் களும் இதைப்பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். பிப்ரவரியிலிருந்து ஜூன் வரைதான் இந்தச் சங்கடங்கள் ஏற்படும். அதற்காக மேட்டூரிலிருந்து 1,300 கன அடி தண்ணீர் வீராணத்திற்குக் கொண்டுவரக்கூடிய திட்டம் இருக் கிறது.

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** காவிரியிலிருந்து ஜேடர் பாளையம் வழியாகவும், வீராணம் வழியாகவும் தண்ணீர் கொண்டு வரக்கூடிய இரண்டு திட்டங்கள் இருந்தன. இப்பொழுது ஜேடர் பாளையத் திட்டத்தைக் கைவிட்டதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஜேடர்பாளையத்தின் மூல மாகக் கொண்டுவரும் திட்டம் 460 மைல் நீளமுள்ளது, வீராணம் வழியாகக் கொண்டுவரும் திட்டம் 135 மைல் நீளம் உள்ளது. இந்த 460 மைல் நீளமுள்ள திட்டத்தைக் கொண்டுவருவதால் செலவு இரண்டு மடங்கு ஆகும். நிலவுடைமையாளர்கள் நிலங்களை